RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt21447

# பாவேந்தர் பாரதிதாசன் பார்வையில் தமிழ்மொழி

எஸ். கிரேசிராணி [அ,]

[அ] தமிழ்த் துறை, விநாயகா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கருப்பூர், கீழப்பழுவூர் - 621707, இந்தியா

# The Tamil language in the perspective of Pavendar Bharathidasan

S. Gracyrani [a, *]

[a] Department of Tamil, Vinayaga College of Arts and Science for Women, Karuppur, Keelapaluvur – 621707, India

* Corresponding Author: ssgracy@gmail.com

Received: 09-03-2021
Revised: 25-09-2021
Accepted: 12-10-2021
Published: 30-10-2021

Check for updates

## ABSTRACT

The education they speak of manifests as an unyielding state in the intellectual wealth of the people. Education fosters the creation of developmental literature. Pavendar Bharathidasan's songs hold a significant place in Tamil language, ethnicity, culture, and literary history. Pavendar's works are perennial contributions to the growth of the Tamil language and its literature. For the Tamil people, Tamil is the mother tongue. Through his poems, it is evident that the Mother language, Tamil, is the mother tongue essential for the Tamil people's life and rights. In the realms of language, ethnicity, literature, and culture, one can observe Pavendar's deep thoughts and his revolutionary expression of wanting to convey them to the world. Language, as an expression of human thought, supports the development of ideas and the enrichment of words. Pavendar Bharathidasan, with keen insight, advances his works to celebrate and showcase the antiquity and greatness of Tamil, his mother tongue, to the world.

**Keywords:** Pavendar Bharathidasan, Mother language, Tamil people, Education

## முன்னுரை

மக்களின் புலைமைச் செல்வத்தில் குன்றாத நிலைக்களமாக விளங்குவது அவர்கள் பேசும் கல்வி உருவாகின்றது. கல்வி வளர்ச்சி இலக்கியங்களை உருவாக்கின்றது. மனித எண்ணத்தின் வெளிப்பாடாகிய மொழி, அவர்தம் கருத்து வளர்ச்சிக்கும் சொல் வளர்ச்சிக்கும் துணை செய்யும் சிறப்புடையது என்பதை நுண்ணிதின் உணர்ந்த பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் தாய்மொழியாகிய தமிழின் தொன்மையும் சிறப்பையும் உலகிற்குப் பறைசாற்றும் விதமாக அவர்தம் படைப்புகள் வழி முன்னிறுத்தி இருப்பதைக் காணமுடிகிறது. தமிழ் மொழி ஒரு கட்டமைப்புள்ள மொழி என்பதனை

தனிமைச் சுவையுள்ள சொல்லை - எங்கள்

தமிழினும் வேறெங்கும் யாம் கண்டதில்லை (மெய்யப்பன்,1996)

என்று எங்கள் தமிழ் மூலம் எடுத்தியம்புகின்றார். தமிழில் ஒரெழுத்துச் சொற்கள் கூடுதலாக உள்ளன. தமிழ் மொழி சைகை மொழியாக இருந்தபோதே பிறந்தத என் அவை மெய்ப்பிக்கின்றன. வா, போ, ஆ, மா, தா நீ, பூ, ஏ, ஐ, கோ, கை, என்று இலக்கணத்திலும் உலக வழக்கிலும் இதனைக் காணலாம். (தமிழண்ணல்,1988)

## பாவேந்திரின் தமிழ்மொழிப் பற்று

ஒரு மனிதனின் உயிர் போன்றது அவனது மொழி, உயிரில்லாத உடல் பயனற்றது போன்றதே மொழியில்லாத மனிதனின் வாழ்க்கை, தாய்மொழி வழிச் சிந்தனையே ஒரு மனிதனை வாழ்க்கை, தாய்மொழிவழிச் சிந்தனையே ஒரு மனிதனை உயர்த்தவும், மனித சமுதாயத்தை மேம்படுத்தவும் வழிவகுக்கும். தாய்மொழி விடுத்துப் பிறமொழிகளை நாடும் தன்மை, தன்னை தானே அழித்துக் கொள்வதற்குச் சமமாகும். இதனை நன்கு உணர்ந்தால் தான் பாவேந்தர் பாரதிதாசன் 'நம் நாட்டு மக்களுக்கு - மொழிப்பற்று வேண்டும்" என்று வலியுறுத்துகின்றார். மொழிப்பற்று இல்லாது வாழ்ந்தால் எந்நாடும் காலப் போக்கில் மெல்ல மெல்ல அழிந்து விடும் என்று கூறுவதை,

“தமிழ் மொழி வாழ்ந்தால் தமிழர் வாழ்வர்

தமிழ் மொழி வீழ்ந்தால் தமிழர் வீழ்வர்

பொருள்மிக்க தமிழ்மொழிக்குப் புரிந்திடுவீர்

நற்றொண்டு புரியீ ராயின்

இருள்மிக்க தாகிவிடும் தமிழ்நாடும்

தமிழர்களின் இனிய வாழ்வும்” (மெய்யப்பன்,1996)

என்ற பாடல் வரிகளால் அறியலாம். தமிழின் சிறப்பையும், உயர்வையும் “தமிழுக்கும் அமுதென்று பேர், அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்க நேர், தமிழ் எங்கள் உரிமைச் செம்பயிருக்கு வேர்” எனவும், ‘இனிமைத் தமிழ்மொழி எமக்கு இன்பம் தரும்படி வாய்ந்த நல்லமுது” எனவும் பாடுகின்றார். இது போன்று தமிழ் உணர்வை மக்களிடம் ஊட்டியவர் பாரதிதாசன்.

செந்தமிழே, உயிரே, நறுந்தேனே, தண்டமிழ், தீந்தமிழ், பாலொடு நிகர் தமிழ் எனத் தமிழின் சிறப்பையும், உயர்வையும் பாடி தமிழ் மொழியை உயிராக எண்ணியவர் பாரதிதாசன். கனிகளின் சுவையும், கருப்பஞ்சாறும், மலரில் ஊறும் தேனும், பசும்பாலின் சுவையும், இளநீர் போன்றதும் எனத் தமிழின் சுவையினைப் பாடுகின்றார். தமிழ்ன்பத்தைப் பாடுகiயில், இன்பங்கள் பல உள்ளன. அவற்றுள் சிறந்ததாகப் பெண் இன்பத்தையே கூறுவர். அருணகிரிநாதர், பட்டினத்தார் போன்றோர் இவ்வின்பத்திற்கு அடிமைப்பட்டு பின்பு பக்தி மார்க்கத்தில் திளைத்தானர். பாரதிதாசனோ அப்பெண்ணின்பத்தை விட இன்பம் தருவது தமிழ் என்று கூறுகின்றார். இவர் தமிழ்மொழி மீது கொண்ட பற்றை, ஈடுபாட்டை, மொழிக் காதலை,

‘மங்கை ஒருத்தி தரும் சுகமும் எங்கள்

மா தமிழுக்கு ஈடு இல்லை” - பாடல் - 85 (மெய்யப்பன்,1996)

என்ற பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

## தாய்மைப் பண்பு

தமிழ் மொழியைத் தாயாக உருவகப்படுத்தி பாடுகின்றார். தமிழைப் பெண்ணின் சுகத்தோடு ஒப்பிடும் கவிஞரின் எண்ணம் தாய்மையின் அன்பினை வெளிப்படுத்துகின்றதை.

'வாழ்வினில் செம்மையைச் செய்பவள் நீயே

மாண்புகள் நீயே, என் தமிழ்த் தாயே,

வீழ்வாரை வீழாது காப்பவள் நீயே,

வீரனின் வீரமும் வெற்றியும் நீயே, - பாடல் - 1 (மெய்யப்பன்,1996)

என்ற பாடல் வரிகளால் அறியலாம்.

## தமிழின் தொன்மை

தமிழ் மொழியின் தொன்மையினை பாடாத புலவர்களே இல்லை எனலாம். அவ்வகையில் கல்தோன்றா மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்தக்குடி என்ற சொற்றொரை அறிஞர்கள் பலரும் எடுத்துக்காட்டுவர். இதைப் போன்றே பாரதிதாசனும் தமிழின் தொன்மையைப் பாடும் போது பரிதி, திங்கள், வானம், விண்மீன்கள், கடல் போன்றவை தோன்றிய காலத்தே தமிழ்மொழியும் தோன்றியது என்று பாடுகின்றார்.

'திங்களொடும் செழும் பரிதி தன்னோடும்

விண்ணோடும் உடுக்களோடும்

மங்குகடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன்

பிறந்தோம் நாங்கள்" -பாடல் -தொகுதி I - 100 (மெய்யப்பன்,1996)

## தமிழ் உணர்வைத் தூண்டுதல்

தமிழியம் என்பது மொழி, இனம், நாடு, பண்பாடு, தமிழர் நலம் இவற்றின் மொத்த உருவமே தமிழியம் என்பர். பாரதிதாசன் சீர்திருத்த உலகை உருவாக்குவதற்கு பகுத்தறிவையும், தமிழியக்கத்தையும் பயன்படுத்தி உள்ளதைக் காணலாம்.

'உயிரை உணர்வை வளர்ப்பது தமிழே" (மெய்யப்பன்,1996)

என்றும், மொழி உயர்ந்தால் மக்கள் வாழ்வு நலம் பெறும் என எண்ணித் தமிழியம் நிலைக்க வேண்டும் என்று பாடுகின்றார். இதனை.

"தமிழ் உயர்ந்தால் தமிழ்நாடு தான் உயரும்

அறிவு உயரும்: அறனும் ஓங்கும்

இமய மலை போல் உயர்ந்த ஒரு நாடும்

தன் மொழியில் தாழ்ந்தால் வீழும்" (மெய்யப்பன்,1996)

என்ற பாடலடிகள் வெளிப்படுத்துகின்றன. பிற மொழிகளின் ஆதிக்கத்திலிருந்து தமிழ்மொழியைக் காக்க வேண்டம் என்பதை,

'சலுகை போனால் போகட்டும் - என்

அலுவல் போனால் போகட்டும்

தலைமுறை ஒரு கோடி கண்ட - என்

தமிழ் விடுதலை ஆகட்டும்" (மெய்யப்பன்,1996)

என்று பாடுகின்றார். தமிழுக்கு ஊறு நேர்ந்தால் தம் உயிரைக் கொடுத்தேனும் அதனைப் போக்குதல் வேண்டும் என இன்றைய இளைஞர்களுக்கு அறிவுறுத்துகின்றார். ஒவ்வொரு மனிதனும் வாழும் இடம் தமிழ்ச் சமுதாயமாக இருக்க வேண்டும். தாழ்ந்த தமிழகம் தலை நிமிர உயிரைத் தரவும தயாராக இருத்தல் வேண்டும் என்று தமிழ்ச் சமுதாய நிலையினை.

'இழந்த பழம்புகழ் மீள வேண்டும், நாட்டில்

எல்லோரும் தமிழர்களாய் வாழ வேண்டும்" (மெய்யப்பன்,1996)

என்று பாடுகின்றார். ஆங்கில மொழிக்குப் பதிலாக தமிழே ஆட்சி மொழியாக இருத்தல் என்று கூறுகின்றார். தமிழ் நாட்டை ஆளும் அமைச்சன் தமிழ் நாட்டனாகவே இருக்க வேண்டும்.

'தமிழாய்ந்த தமிழன் தான்

தமிழ் நாட்டில் முதலமைச்சராய்

வருதல் வேண்டும்" (மெய்யப்பன்,1996)

தமிழும், தமிழன் நலமும், தமிழினமும் வாழும் என்கிறார். இவற்றுக்கெல்லாம் தமிழ்க் கல்வி கட்டாயம் கொண்டு வருதல் வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

## தமிழ் வளர்ச்சி

இந்தியனைப் பார்த்து 'நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மனிதரைப் பார்த்து" என்று பாரதி கூறியதைப் போல பாரதிதாசனும் தமிழ் உணர்வு கொண்டு தமிழின் வளர்ச்சிக்காவும், தமிழ் மொழி கெட்டு வரும் நிலையைக் கண்டு மனம் வருந்தியும் பாடுகின்றார்.

"கடலியக்கும் சுவைப்பாட்டே, கண்ணான செந்தமிழே, அன்பே, நாட்டில்

கெடலியக்கும் நெஞ்சுடையார் துறைதோறும் நின்னெழிலைக் கெடுக்கப் பாடு

படல்தன்னை நினைக்கையிலே நெஞ்சுபதைக் கும்பகர வாய்ப தைக்கும்." (மெய்யப்பன்,1996)

என்று கூறுவதால் அறியலாம். தமிழ் மொழி வளர்ச்சி பெறுவதற்கு எளிமையான நடையில் தமிழ் நூல்கள் எழுத வேண்டும் என்றும், இலக்கண நூல்கள் புதியதாக இயற்றல் வேண்டும் என்றும், வெளிநாடுகளில், அவர்களின் சிந்தனைகளில் புதிதாகப் படைக்கப்பட்டனவற்றை, தெளிவான படங்களோடு கூடிய நூல்களை மொழி பெயர்க்க வேண்டுமெனவும் கூறுகின்றார். மேலும் துறைதோறும் துறை சார்ந்த நூல்கள் நல்ல தமிழில் இருக்க வேண்டும் என்றும், இலவச நூலகங்கள் எல்லா இடங்களிலும் செயல்பட வேண்டும் என்றும் கூறுகின்றார். பெயர்ப் பலகைகளைத் தமிழில் இடுதல் வேண்டும் என்றும், தமிழில் தான் கோவில்களில் வழிபாடு செய்தல் வேண்டும் என்றும், இசைப் பாடலக்ள் தமிழில் பாடுதல் வேண்டும் என்றும் தம் பாடல்களின் மூலம் எடுத்தியம்புகின்றார்.

பல்கலைக்கழகங்கள் பல நிறுவி தமிழை வளர்க்க வேண்டும். தமிழ்ப்பள்ளி, தமிழ்க்கல்லூரி, தமிழேடு என்றெல்லாம் தமிழ்ச் சான்றோர்கள் இவ்வமைப்புகளை நிறுவி தமிழ்த் தொண்டு செய்தல் வேண்டும். மொழி உயர்ந்தால் நாடு உயரும் இமயமலை போல், உயர்ந்த எந்த நாடும் தம் மொழியில் தாழ்ந்து விட்டால் வீழும் என்றும் தமிழ் மொழி வளர்ச்சிக்கான பாதைகளைத் தம் கவிதை திறத்தால் எடுத்தியம்புகின்றார்.

## முடிவுரை

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுடைய பாடல்களை தமிழ் மொழி, தமிழ் இனம், தமிழப் பண்பாடு, இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது. தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும், இலக்கிய வளர்ச்சிக்கும் பாவேந்தரின் பணிகள் என்றென்றும் நிலைபேற்றையுடையது. தமிழ் இனத்தவர்க்குத் தமிழ்தான் தாய்மொழி. தமிழரின் உரிமைக்கு வாழ்விற்குத் தாய் மொழியாம் தமிழ்மொழி தான் என்பதை இவரது கவிதைகளின் மூலம் வெளிப்படுகிறது. மொழி, இனம், இலக்கியம், பண்பாடு என்ற நிலைகளில் பாவேந்தரின் ஆழ்ந்த சிந்தனையும், அவற்றை இவ்வுலகிற்கு வெளிப்படுத்திக் காட்ட வேண்டும் என்ற உள்ள வெளிப்பாட்டின் புரட்சியையும் காணமுடிகிறது.

## References

Meiyappan (1996) Bharathidasan Poems, Manivasagar Publications, Trichy.

Tamizhannal (1988) Tamil Literary History from a New Perspective, Meenakshi Book House, Madurai.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author’s has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2021. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License